10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 147 புதன்கிழமை ஒக்ரோபர் 18 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## சு.கவுக்கு புதிதாக ஒன்பது அமைப்பாளர்கள் நியமனம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு புதிய மாவட்ட அமைப்பாளர்கள் ஒன்பது பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். கொழும்பு, அம்பாறை, மாத்தறை, மாத்தளை மற்றும் இரத்தினபுரி ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கே இந்த நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. ஒன்பது அமைப்பாளர்களுக்குமான நியமனக் கடிதங்கள் நேற்றுக் காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. (எ)





# ஒருநாள் சாகும்வரை உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஒக்.18

சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்றுக் காலை ஆரம்பித்த யாழ்.பல்கலைகழக மாணவர்கள் தமது போராட்டத்தினை நேற்று மாலையே கைவிட்டுள்ளனர். அனுராதபுர சிறைச்சாலையில் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மூன்று தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கையை நிறைவேற்ற கோரியும் , சகல தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிக்க கோரியும் யாழ்.பல்கலைகழக மாணவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை முதல் சாகும் வரையிலான உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில் நாளை காலை ஜனாதிபதியைச் சந்திக்க யாழ்.பல்கலைகழக மாணவர் ஒன்றியத்திற்கு அனுமதி கிடைத்துள்ளது.

இதனையடுத்து தமது உண்ணா விரதப் போராட்டத்தினை அடை 07




## ஜகார்த்தா விபத்தில் குருநகர் இளைஞர் சாவு!



ஜகார்த்தா, ஒக், 18.

இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவில் நேற்று அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் யாழ். இளைஞர் ஒருவர் பலியானர்.

யாழ்ப்பாணம், குருநகரைச் சேர்ந்த யேசுதாசன் யோன்சன் என்பவரே இவ்வாறு பலியானவராவார்.

நேற்று அதிகாலை குறித்த இளைஞர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை, தூணோடு மோதி உயிரிழந்தாக ,அவரின் நண்பர்களுக்கு இந்தோனேசியப் பொலிஸார் தகவல் தெரிவித்தனர். இதனையடுத்து, 07

## இறக்குமதி முதல்வருக்கு

# இனிமேல் இடமில்லை



கொழும்பு, ஒக்ரோபர் 18

இனிவரும் காலங்களில் வடமாகாண முதலமைச்சராக இறக்குமதிகளைக் கொண்டுவரப்போவதில்லையென தமிழரசுக் கட்சி முடிவெடுத்துள்ளதாக வடமாகாணசபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார். வடமாகாணத்தின் அடுத்த முதலமைச்சராக பிரதம நீதியரசர் ஸ்ரீபவனை நியமிப்பதற்கு தமிழசுக் கட்சி அவருடன் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியானது. இது தொடர்பாக குறிப்பிட்டுள்ள அவர்,

"ஊடகங்களில் சில செய்திகள் ஊகத்தின் அடிப்படையில் வெளிவருகின்றன. இருப்பினும் இறக்குமதிகளின் அனுபவம் தமிழரசுக் கட்சிக்கு உண்டு. இனிவரும் காலங்களில் எந்தத் தேர்தலாக இருந்தாலும் தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில், இந்த மண்ணிலே எங்களோடு நின்று, கட்சியோடு நின்று, கட்சியோடு பாடுபட்டவர்கள்தான் தேர்தல்களில் பங்குபற்றலாம். ஸ்ரீபவனுக்காக நான் இந்தக் கருத்தைக் 07

## சம்பந்தர் பிரேரணை சபையில் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஒக்.18

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை தாமதமின்றி, விடுவிக்க நடவடிக்கை எடுக்கக் கோரி, இலங்கை நாடாளுமன்றத்தில் நேற்று ஒத்திவைப்பு வேளை பிரேரணை ஒன்றை எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் சமர்ப்பித்துள்ளார்.

20 நாட்களுக்கும் மேலாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த மூன்று தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிரான வழக்கு விசாரணையை அவர்களின் கோரிக்கைக்கு அமைய வவுனியா மேல் நீதிமன்றத்தில் நடத்தாமல் சிங்கள மொழியில் வழக்கை விசாரிக்கும் ஒரு நீதிமன்றத்திற்கு 07



## இராணுவத்துக்கு எதிராக முல்லையில் போராட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு முன்பாகவுள்ள இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் காணியை உடனடியாக விடுவிக்குமாறு கோரி நேற்று அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 07




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி-24 மாநாட்டின் தலைமை இலங்கைக்கு

அமெரிக்காவில் நடைபெற்ற ஜி-24 மாநாட்டின் தலைமைத்துவம் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு வழங்கப்பட்டுள்ளது. மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதே உறுப்பு நாடுகளின் கூட்டு பொறுப்பாக இருக்க வேண்டுமென்பதை சுட்டிக்காட்டினார். இம்முறை ஜி-24 மாநாட்டின் தொனிப் பொருள், 'அபிவிருத்தி, தொழில் வாய்ப்பு மற்றும் கட்டமைப்பு ரீதியான மாற்றம் என்பதாகும்' ஜி-24 மாநாட்டு அமைப்பின் கடந்த கால அனுபவங்களை கருத்திற்கொண்டு முக்கியத்துவங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டுமென அமைச்சர் குறிப்பிட்டார். தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்காக வினைத்திறனை அதிகரித்தல், அபிவிருத்திக்கான நிதியை வழங்குதல் என்பன கருத்திற் கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயங்களாகும் என்றும் சுட்டிக்காட்டிய அமைச்சர், சர்வதேச வர்த்தகம், புதிய உற்பத்திகள், தனியார் துறையின் முதலீடுகளை விருத்தி செய்தல் என்பன தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்றும் கூறினார். (உ)

## லிட்ரோ காஸ் தலைவரின் உறவினர் கைது

கொழும்பு, ஒக்.18

தாய்வான் வங்கியில் இருந்து இணையம் ஊடாக நிதி கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பாக குட்டியாராச்சி சூலபால டி சில்வா என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் லிட்ரோ காஸ் நிறுவனத்தின் தலைவர் ஷலில முனசிங்கவின் உறவினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த சந்தேக நபர்களுபோவில பிரதேசத்தில் வைத்து குற்ற விசாரணை பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர். (உ)

## மாவா போதையுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஒக்.18

910 கிராம் மாவா போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் விஷேட அதிரடி படையினரால் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் ஒன்று நோர்வூட் பகுதியில் நேற்று இடம் பெற்றுள்ளது. கொழும்பில் இருந்து மலையகப் பிரதேசத்துக்கு வருக்கின்ற இளைஞர்களை இலக்கு வைத்து இந்த மாவா போதைப் பொருள் விற்பனை செய்யப்படுவதாக பொலிஸ் விஷேட அதிரடி படையினர் தெரிவித்தனர் . கொழும்பில் இருந்து நோர்வூட் பகுதிக்கு விற்பனைக்காக கொண்டு வரப்பட்ட மாவா போதைப் பொருள் தொடர்பாக விஷேட அதிரடிபடையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (உ)

## வடக்கில் தற்கொலை அதிகரிப்பு

கொழும்பு, ஒக்.18

இலங்கையில் அதிகளவில் தற்கொலைச் சம்பவங்கள் பதிவாகும் மாகாணமாக வடக்கு மாகாணம் காணப்படுகின்றது என சமூக நலன்புரி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். மன அழுத்தம், உளவியல் பிரச்சினைகள் காரணமாக அதிகளவில் தற்கொலைகள் பதிவாகின்றன என அவர் தெரிவித்துள்ளார். மூன்று தசாப்த காலமாக நீடித்த போர் அதன் பின்னரான சூழ்நிலைகள் காரணமாக இவ்வாறு தற்கொலைகள் அதிகளவில் பதிவாகின்றன எனவும் குறிப்பிட்டுள்ளார். (உ)

## சிவாஜிக்கு எதிராக விரைவில் நடவடிக்கை



கொழும்பு, ஒக்.18

"நீதிமன்ற உத்தரவுகளை மீறி ஆர்ப்பாட்டங்களை நடத்தும் அனைவருக்கும் எதிராக, கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என, பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார். "வடக்குக்கு ஒரு நீதியும் தென் மாகாணத்துக்கு ஒரு நீதியும் என இரண்டு விசேட நீதிகள் எதுவும் இல்லை. இந்நாட்டில் ஒரு சட்டமே உள்ளது. இந்தக் காரணத்தால் தெற்கு மக்களுக்கு சட்ட நடவடிக்கை எடுத்ததைப் போன்று விரைவில் சிவாஜிலிங்கத்துக்கும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" எனவும் தெரிவித்தார். கொழும்பில், நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (எ)

## கடற்படை நடவடிக்கை வடக்கில் அதிகரிப்பு



கடந்த இரண்டு மாதங்களில், வடக்கில் கடற்படையின் நடவடிக்கைகள் பத்து மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா தெரிவித்துள்ளார். "கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்ட பின்னர், கடந்த இரண்டு மாதங்களில் வடக்கில் கடற்படையின் நிலைப்படுத்தல் முறைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. கடற்படையினரின் நடவடிக்கைகள் அங்கு பத்து மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளன. ஏனைய பகுதிகளில் இருந்து எமது படகுகளை எடுத்து எல்லையில் குவித்துள்ளோம். வடக்கில் பயன்படுத்தப்படும் படகுகளின் வகையிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதிவேகத் தாக்குதல் படகுகளுக்குப் பதிலாக, அதிவேகப் பீரங்கிப் படகுகளை நிறுத்தியுள்ளோம். எமது நடவடிக்கைகள் முன்னரைப் போல இரகசியமானவையாக இல்லை. வெளிப்படைத்தன்மையும், பார்க்கக் கூடியதாகவும் உள்ளன. முன்னைய முறை தவறானது. போரின் போது வேண்டுமானால் இரகசிய முறைகளைக் கடைப்பிடிக்கலாம். போருக்குப் பின்னர் அவை அவசியமற்றவை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

## பங்களாதேஷ் ஆலோசகர் இராணுவத் தளபதியுடன் சந்திப்பு



பங்களாதேஷின் இலங்கைக்கான பாதுகாப்பு ஆலோசகர் கொமடோர் சிவிட் மக்சுமுள் ஹகிம் இலங்கை இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்கவை சந்தித்துள்ளார். இராணுவத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த உத்தியோகபூர்வமான சந்திப்பின்போது இருவருக்கும் இடையில் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது. இதனை நினைவுகூரும் வகையில் இருவருக்கும் இடையில் நினைவு சின்னங்கள் பரிமாறப்பட்டன. (உ)

## பப்புவா – நியூகினியாவில் இறந்த இளைஞனின் உடலம் நல்லடக்கம்!



ஆஸ்திரேலியாவுக்கு புகலிடம் கோரிச் சென்று பப்புவா - நியூகினியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், தற்கொலை செய்துகொண்ட இளைஞனின் இறுதிக் கிரியை நேற்று இடம்பெற்றது.

யாழ்.சாவகச்சேரி மீசாலை தெற்கைச் சேர்ந்த 32 வயதுடைய இராஜேந்திரன் ராஜீப் என்ற இளைஞன் கடந்த 2 ஆம் திகதி தற்கொலை செய்துகொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதனையடுத்து நேற்றுமுன்தினம் சடலம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு, நேற்று இறுதிக் கிரியைகள் இடம்பெற்று சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த நிலையில், குறித்த இளைஞனின் மரணத்தில் பெற்றோர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். முகாமில் அவருக்கு ஏற்றப்பட்ட ஊசி மருந்து காரணமாக இந்த மரணம் நிகழ்ந்துள்ளதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (உ-04)

## வெளிநோயாளர் பிரிவு திறப்பு!



யாழ்.வரணிப் பிரதேச வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள வெளிநோயாளர் பிரிவுக்கான கட்டடம் நேற்று திறந்துவைக்கப்பட்டது. வட மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஞா.குணசீலன் அதனைத் திறந்துவைத்தார். (உ-04)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
செவ்வாய், 17 ஒக்ரோபர் 2017 ethirolijaffna@gmail.com

## பாவம் மைத்திரி!

தேசிய தமிழ்மொழித்தினத்துக்காக யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால, 'என்னைப் பலவீனப்படுத்தினால் தெற்கில் உள்ள பேய்கள் பலம் பெற்றுவிடும்" என்று ஒரு பூச்சாண்டியைக் காட்டிவிட்டுப் போயிருந்தார். அதாவது " எனக்கு எதிராக நடந்து, ஆட்சியில் இருந்து அகற்றுவீர்களானால், மகிந்த என்ற பேய் வந்து உங்களை விழுங்கிவிடும். ஆகவே நான் செய்யும் அத்தனையையும் நீங்கள் சமாளிக்கத்தான் வேண்டும்" என்பதே அவர் உரையின் உட்கருத்து.

புது விளக்குமாறு புழுதி பறக்கக் கூட்டும், மைத்திரியும் ஆட்சிக்கு வந்தவுடன் எல்லாமே அதிசயங்களாக இருந்தன. பதவியேற்பு வைபவத்தை ஒரு சில ஆயிரம் ரூபாவோடு மட்டுப்படுத்தியமை, வீட்டிலிருந்து கொண்டுவரும் சாப்பாட்டையே உண்டமை, காலிமுகத்திடலில் மக்களோடு மக்களாக உடற்பயிற்சி செய்து செல்பி எடுத்தமை, சாதாரண விமானத்தில் வெளிநாட்டுக்குச் சென்றமை என்ற மைத்திரி லீலைகளில், எந்தவித பாதுகாப்பு ஏற்பாடுகளும் இல்லாமைல் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்குப் பகுதிக்கு வந்து போனமையும் இடம்பெற்றிருந்தது.

மகிந்த காலத்தில், அரச உயர்மட்டத்தைச் சேர்ந்த ஒருவர் வடக்குக்கு வருகிறார் என்றால். ஒரு வாரத்துக்கு முன்னரேயே கெடுபிடிகள் தொடங்கிவிடும். 'பீல்ட் பைக்குகள்' உறும ஊரே பதகளித்து நிற்கும். சந்தேகபடுபவர்கள் கைது செய்யப்படுவர். வீதிகளூடான மக்களின் போக்குவரத்து அந்த ஒரு வாரமும் அடிக்கடி ஸ்தம்பிதமாகும். ' எதற்கு வீண் பிரச்சினை?" என்று பலர் அத்தகைய நேரங்களில் வீட்டுக்குள்ளேயே தமது நடமாட்டத்தைச் சுருக்கிவிடுவர்.அதிலும் மகிந்த வருவதாக இருந்தால், இந்தக் கெடுபிடிகளின் உச்சம் பற்றிக் கேட்கவே தேவையில்லை. அங்குலத்துக்கு அங்குலம் படைகளை இறக்கி, வடக்கு முழுதும் நீக்கமறச் சீருடையால் போர்த்தியதைப் போல இருக்கும். தேடுதல்கள், சுற்றிவளைப்புகளும் இடையிடையே நடக்கும். மகிந்த வந்து போவதற்குள் " இவன் ஏன் இஞ்ச வாறான். உதால நாங்கள்தானே சீரழிறம், இதைவிட வராமலே இருக்கலாம்" என்று மக்கள் நினைக்குமளவுக்கு, மகிந்த அரசர் அல்லது மைத்திரி சொன்ன பேயின் வரவு இருக்கும்.

இதற்கு எதிர்மாறாக, எந்தப் பந்தாவும் இல்லாமல், மின்னாமல் முழங்காமல் தன்னுடைய முதல் யாழ்ப்பாண வருகையினை மைத்திரி நிகழ்த்தியிருந்தார். மக்கள் மகிந்தவையும் மைத்திரியையும் ஒப்பிட்டு பேசி, மைத்திரியின் எளிமையான வருகையைக் கொண்டாடினர். ஆனால் எல்லாமே கொஞ்சக்காலம் தான். பின்னர் மெல்ல மெல்ல மைத்திரி முருங்கை மரத்தில் ஏற, பாதுகாப்புக் கெடுபிடிகள் நம்மையுமறியாமலே அதிகரிக்கப்பட்டன. அத்தோடு என்னென்ன வாக்குறுதிகளை நல்லாட்சி அரசு வழங்கியதோ, அவையெல்லாவற்றையும் காற்றில் பறக்கவிட்டு, " இதை விட மகிந்தவே பரவாயில்லை" என்னுமளவுக்கு நிலைமை போய்விட்டது.

இப்படிப்பட்ட நிலையில் இந்த மாதம் 21 ஆம் திகதி வவுனியாவில் நடைபெறவுள்ள நடமாடும் சேவைக்காக ஜனாதிபதி மைத்திரியும், பிரதமர் ரனில் வரவுள்ளார். இன்னும் அந்த வருகைக்காக சில நாள்கள் இருக்கையிலேயே , குறித்த நிகழ்வு நடக்க இருக்கும் சூழலைச் சுற்றிவர உள்ளவர்களின்விபரங்கள்,அவர்களின்வீட்டில்தங்கியுள்ளவர்களின் தகவல்கள், வியாபார நிலையத் தரவுகள் என பொலிஸ் எல்லாவற்றையும் நோண்டி, ஒரு போர்க்காலச் சூழலை பொலிஸ் தரப்பு வவுனியாவில் ஏற்படுத்தியுள்ளது. மகிந்த வரும்போதாவது வீதிக்கு இறங்கினால்தான் பிரச்சினை. ஆனால் மைத்திரி வருவதென்றால் வீட்டில் கூட நிம்மதியாக இருக்க முடியாதுள்ளதாக மக்கள் விசனப்படுமளவுக்கு மைத்திரி மாயை அகன்றுவிட்டது. நிலைமை இப்படியிருக்க, " என்னைக் கலைத்தால் பெரிய உம்மாண்டி வந்து உங்களைப் பிடிக்கும்" என சிறுபிள்ளைத்தனமாக மைத்திரி சொல்லித் திரிகிறார். பாவம், அவருக்குத் தெரியவில்லை, மகிந்தவுக்குச் சற்றும் சளைக்காத இன்னொரு பேயாகவே மைத்திரியையும் தமிழ் மக்கள் பார்க்கத் தொடங்கி நீண்ட நாட்களாகிவிட்டன என்பது.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# சிறைச்சாலையை திறக்க மாட்டேன்

## அடம்பிடித்த மைத்திரி

கொழும்பு, ஒக்.18

இலங்கையின் அதி நவீன சிறைச்சாலையைத் திறந்துவைக்க தன்னால் முடியாது என மைத்திரி மறுத்த தகவல் தற்போது வெளியாகியுள்ளது. கைதிகளுக்கான சிறப்பு வசதிகளைக் கொண்ட சர்வதேச தர நியமங்களுக்கேற்ப கட்டப்பட்ட 'சுப்பர்' சிறைச்சாலை நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. அம்பாந்தோட்டையில் உள்ள அங்குணுகொலபெலஸ்ஸவில் இந்தச் சிறை அமைக்கப்பட்டிருந்தது. இதனை மறுசீரமைப்பு அமைச்சர் டி. எம்.சுவாமிநாதன் திறந்து வைத்தார். இந்தச் சிறைச்சாலையைத் திறந்து வைக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கே முதலில் அழைப்பு விடப்பட்டது. எனினும் அவர் அந்த அழைப்பை நிராகரித்ததாலேயே , சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் இதனைத் திறந்து வைத்துள்ளார். " நாட்டில் சிறைச்சாலைகள் புதிதாகத் திறக்கப்படுகின்றன என்றால் ஆட்சி சரியில்லை என்று அர்த்தம். ஆகவே என்னால் அதனைத் திறந்து வைக்க முடியாது" என்று மைத்திரி தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது.(ஆ)



## விஜய் 'கட்-அவுட்டுக்கு' யாழ்ப்பாணத்தில் தீ!



யாழ்.நகரில் உள்ள திரையரங்குக்கு முன்னால் அமைக்கப்பட்டிருந்த தென்னிந்திய நடிகர் விஜயின் 80 அடி 'கட் -அவுட்' நேற்றிரவு இனந்தெரியாதோரால் தீவைத்துக் கொளுத்தப்பட்டுள்ளது. தீபாவளியை முன்னிட்டு விஜய் நடித்த 'மெர்சல்' திரைப்படம் வெளியாகவுள்ளது. இதனையொட்டி யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் விஜய் ரசிகர்கள் 'கட்-அவுட்' வைத்துள்ளார். இவற்றில் மிகப்பெரிய 'கட்-அவுட்' 80 அடி உயரத்தில் யாழ். நகரில் உள்ள திரையரங்கு ஒன்றின் முன்னால் அமைக்கப்பட்டிருந்தது. இதுவே இதுவரை யாழ்ப்பாணத்தில் வைக்கப்பட்ட கட்-அவுட்களில் மிகப்பெரியது எனக் கூறப்பட்டது. இந்தநிலையில் நேற்றிரவு அதனை இனம்தெரியாத சிலர் தீவைத்து எரித்துள்ளனர். இதனால் குறித்த 'கட்-அவுட்டின்' கீழ்ப்பகுதி சேதமடைந்தது. இதேவேளை நேற்று முன் தினம் வல்வெட்டித்துறையில் அமைக்கப்பட்டிருந்த விஜய் 'கட்-அவுட்டும்' மர்ம நபர்களால் கிழித்தெறியப்பட்டிருந்தது. (அ)

## டெங்கைக் கட்டுப்படுத்த ஒத்துழைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.18

டெங்கு நுளம்பு பெருகக் கூடிய அனைத்து இடங்களையும் சுத்தப்படுத்துமாறு சுகாதார அமைச்சு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. அண்மைக்காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற, டெங்கு ஒழிப்புத் திட்டங்கள் காரணமாக டெங்கு நுளம்புப் பெருக்கம் குறைவடைந்துள்ளதாகச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஜயசுந்தர பண்டார கூறியுள்ளார்.இந்த நிலைமையை தொடர்ந்தும் பேணுவதற்கு மக்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.கடந்த சில மாதங்களாக டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு சுமார் 9000 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இந்த எண்ணிக்கை தற்போது 1000 வரை குறைவடைந்துள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணத்தின் 9 சுகாதாரப் பிரிவுகளில் நேற்றும் டெங்குச் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போது 104 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தொற்றா நோய்த் தடுப்புப் பிரிவின் யாழ். பிராந்திய வைத்திய அத்தியட்சகர் கோபாலமூர்த்தி ரஜீவ் தெரிவித்தார்.(அ)

## சிவில் பாதுகாப்பு அதிகாரி பலி

கொழும்பு - வெல்லவாய வீதியின் அம்பலன்தோட்டை நகரில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிவில் பாதுகாப்புப் படை அதிகாரி ஒருவர் நேற்று உயிரிழந்தார்.வீதியில் மோட்டார் வாகனங்களை பரிசோதிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, அதிவேகமாக வந்த கெப் ரக வாகனம் ஒன்று மோதியதிலேயே இவர் பலியாகியுள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.இந்தச் சம்பவம் தொடர்பில் கெப் வண்டியின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். (அ)

# மாணவர் பலிக்கடாவா?

## அமைச்சர் ஆவேசம்



ஆசிரியர் இடமாற்றத்துக்கு எதிராக மாணவர்களை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுத்த சில ஆசிரியர்கள் முயற்சிப்பதற்கு எதிராக, சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என, கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

"அண்மைக்காலமாக மாணவர்களைத் தங்களது சொந்தக் காரியங்களுக்காக ஆசிரியர்கள் சிலர் பகடைக்காயாகப் பயன்படுத்தி வருகின்றனர். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கல்வியையும், ஒழுக்கத்தையும் , வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை விடயங்களையும் கற்றுக் கொடுப்பதற்குப் பதிலாக ஆர்ப்பாட்டம் செய்யவே கற்றுக் கொடுக்கிறார்கள். தங்களது சுயநலனுக்காக மாணவர்களைப் பலிக்கடாக்களாக்கும் ஆசிரியர்களுக்கு எதிராக இனிவரும் காலங்களில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)


## இன்று நாளும் கோளும்

18.10.2017 புதன்கிழமை ஏவிளம்பி வருடம் ஐப்பசி மாதம் 01 ஆம் நாள

| | | | |
|---|---|---|---|
| சதுர்த்தசி பி.இ. 12.29 வரை | உத்தரம் மு.ப. 7.47 மணி வரை | அமிர்தசித்தயோகம் | அரசாங்க விடுமுறை |
| இராகுகாலம் 12.02 - 01.32 | சுபநேரம் 04.32 - 06.02 | எமகண்டம் 07.32 - 09.02 | |

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உயர்வு | பக்தி | ஒய்வு | பாசம் | வெற்றி | நன்மை | இன்பம் | நிறைவு | ஆர்வம் | பரிவு | பெருமை | நட்டம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆச்சரியச் 'செல்பி'!

ஐக்கிய நாடுகளுக்கான இளைஞர் தூதுவர் ஜயத்ம விக்ரம நாயக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை சந்தித்த மகிழ்ச்சியில் அவருடன் எடுத்துக் கொண்ட செல்பி சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றது. ரஷ்யாவின் சோசி நகரில் இடம்பெறும் இளைஞர் மற்றும் மாணவர்களின் 19 ஆவது உலகத் திருவிழாவில் இந்தச் 'செல்பிச்' சந்திப்பு இடம்பெற்றுள்ளது. பொதுவாக ரஷ்ய அதிபர் புட்டின் செல்பி எடுத்துக் கொள்வதில்லை. ஆனால் ஜயத்ம கேட்டதும், மறுக்காமல் அவருடைய செல்பிக்குப் 'போஸ்' கொடுத்தமை அனைவரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளது. (ஆ)

## நைஜீரிய ஜனாதிபதி இலங்கைக்கு திடீர் 'விசிட்'



நைஜீரிய நாட்டு ஜனாதிபதி மொஹமட் புஹாரி திடீரென இலங்கை விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளார்.

இந்தோனேசியாவுக்குப் பயணம் மேற்கொண்ட நைஜீரிய ஜனாதிபதியை அழைத்து வந்த விமானம், எரிபொருள் தீர்ந்து போனதால் , அதனைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கையில் குறுங்கால முன்னறிவித்தலோடு நேற்று அதிகாலை 3.20 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளது. மீண்டும் அதிகாலை 5.40 மணியளவில் அது பயணத்தை ஆரம்பித்துள்ளது. இந்தக் காலப்பகுதியில் விமான நிலையத்தின் விசேட விருந்தினர் பக்கத்தில் நைஜீரிய நாட்டு ஜனாதிபதி தங்கியிருந்தார் என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.(ஆ)

# வவுனியா போர்க்கோலம்



எதிர்வரும் 21ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் வவுனியாவுக்கு விஜயம் செய்யவுள்ளதால், நேற்றுமுதல் வவுனியாவின் பல இடங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

வவுனியா, சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் நடத்தப்படவுள்ள நடமாடும் சேவையில் பங்கேற்பதற்காகவே ஜனாதிபதியும், பிரதமரும் இந்த விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளனர். இவர்களுடன் சில அமைச்சர்களும் வவுனியாவுக்குச் செல்லவுள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்த நிலையில், நகரை அண்மித்த இரண்டு கிலோ மீற்றர் சுற்றுவட்டத்தில் உள்ளவர்களின் குடும்ப விபரங்கள், வியாபார நிலையத்திலுள்ளவர்களின் பெயர் விபரங்கள், புதிதாக உறவினர்கள் வருகைத் தந்திருந்தால் அவர்களின் விபரங்கள் என்பவற்றைப் பொலிஸார் சேகரித்து வருகின்றனர். யுத்தகாலத்தில் காணப்பட்ட பாதுகாப்பு நடைமுறையை ஒத்ததாக தற்போது ஜனாதிபதி மற்றும் பிரதமர் வருகையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு நடவடிக்கைள் அமைந்துள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (ஆ)

# வங்கிகளுக்கு இலங்கையில் இணையவழி ஆபத்து

கொழும்பு, ஒக்.18

இலங்கையின் வங்கி கட்டமைப்புக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள வங்கிகளின் கணினிக் கட்டமைப்புக்குள் ஹெக்கர்கள் ஊடுருவதற்கான வாய்ப்புகள் உள்ளதா கச்சந்தேகிப்பதனால் வங்கிப் பாதுகாப்புப் பிரிவுகள் ஆயத்தமாக உள்ளனவென்றும் கூறப்படுகின்றது.

கடந்த காலங்களில் வங்கிக் கணினிக் கட்டமைப்புகளின் பாதுகாப்புத் தொடர்பில் வங்கிப் பிரதானிகளின் தலைமையில் மாநாடு நடைபெற்றது. இதன்போது இலங்கை வங்கியின் கட்டமைப்பில் சைபர் தாக்குதல் மேற்கொள்ள முடியும் என கணினி வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அரசாங்கம் மற்றும் தனியார் வங்கிகள் தங்கள் கணினிக் கட்டமைப்புக்குள் வெளிநபர்கள் நுழைய முடியுமா என்பது தொடர்பில் ஆராய்வதற்கு , கணினி வல்லுநர்களின் உதவியைப் பெற்றுக் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்கள் வங்கிக் கட்டமைப்புக்கு உள்ள பாதுகாப்புப் பலவீனத்தை சுட்டிக்காட்டியுள்ளனர். அதற்கமைய தற்போது பாதுகாப்பு அதிகம் வழங்கும் முறைகள் பின்பற்றப்படுவதாகத் தகவல் வெளியாகியுள்ளது. எனினும் இந்த முறை தொடர்பில் பாதுகாப்புப் பிரிவு திருப்தி அடையவில்லை. (அ)



# இடமது கைவிடேல்!

வர..வர எங்கடை ஆக்களிட்டை இப்ப மரியாதை சரியாக் குறைஞ்சு போச்சுது. ஒரு சதத்துக்கு ஒரு ஆள் மற்றாளை மதிக்கிறதுமில்லை,மற்றவையளைப்பற்றிக் கவலைப்படுகிறதுமில்லை. இதை ஏன் நான் இப்ப சொல்லுறனெண்டால்....

நேற்றைக்கு அச்சுவேலிக்கு கிடாய் ஆடொண்டு நிக்கிறதாக் கேள்விப்பட்டுப் பாக்கப் போன னான். சத்தியமாமச் சொல்லுறன் தீவாளிக்கு வெட்டிறதுக்கில்ல. என்னட்டை நிக்கிற மறிக்குச் சோடியாக்க வேணுமெண்டுதான் நினைச்சுப் போன னான்.

முந்தியெண்டால் சைக்கிளை எடுத்து எட்டி மிதிச்சால் உரும்பிராய்க்குள்ளாலை ஒரு இருபது - முப்பது நிமிசம் காணும். இப்ப வயசு போட்டுது. ஏலாமக் கிடக்கு. அதாலை யாழ்ப்பாண பஸ்ராண்டிலை போய் 750 பஸ்ஸைப் பிடிச்சுப் போனால் சுகம் எண்டு நினைச்சன். பஸ்ராண்டில கன நேரம் இருந்தன். தீபாவளிக் கொண்டாட்டத்துக்குச் சாமான் சக்கட்டு வாங்கிறதாலை எல்லா இடமும் ஒரே சனம்.


கொஞ்ச நேரத்துக்குப் பின்னாலை பஸ் வந்திது. கனநேரம் பஸ்ஸைப் பாத்துக் கொண்டு நிண்டதாக்கும், பஸ்ஸை றைவர் நிப்பாட்ட முன்னம், அடிச்சுப் பிடிச்சுச் சனம் ஏறி இடத்துக்கும் அடிபிடிப்பட்டு ஒரு மாதிரி இருந்தால், ஒரே புழுக்கம். நல்ல காலம் நான் ஒரு தண்ணிப் போத்திலோடை ஏறினதாலை சுகமாப் போச்சுது.

பஸ் வெளிக்கிடேக்கை ஒரு வயசு போன ஆளும் ஒரு குமர்ப்பிள்ளையும் ஓடி வந்து ஏறிச்சினம். அந்த வயசு போன ஆள் சாதுவா நொண்டி நொண்டித்தான் வந்தவர். அப்ப பாக்கேக்கை ஆளிலை பிசகு இருக்குது எண்டு தெரிஞ்சுது. ஏறினாப்போலை அவர் றைவரோடை ஏதோ கதைச்சார்.

உடனை றைவர் முன்னுக்கிருந்த சீற்றிலை இருந்த இரண்டு குமரியளைப் பாத்துச் சொன்னார் 'ஐயா ஒரு கிட்னி பேஸன்ட். எழும்பி இடத்தைக் குடுங்கோ" எண்டு. அவையள் இரண்டு பேரும் காது கேக்காதைவளையளைப் போலை யன்னலுக்கு வெளியிலை பிராக்குப் பாத்துக் கொண்டு இருக்கினம். இரண்டு தரம் சத்தம் போட்டுக் கத்திப் பாத்தார். ஊகூம்... அவை அசையேல்லை. றைவருக்குக் கோபம் வந்திட்டுது. தலையைத் திருப்பி அடுத்த சீற்றிலை இருந்த ஆக்களிட்டையும் கேட்டார். அவையும் முந்தின ஆக்களைவிடக் கேவலம். இதுக்கிடையிலை கொஞ்சந் தள்ளி இருந்த ஒரு வயசு போன அம்மா தான் எழும்பித் தன்ரை இடத்தைக் குடுத்தவ.

பஸ் போகேக்கை பாத்தால் முன்னுக்கிருந்த இரண்டு குமரியளும் நல்லூரடியிலை இறங்கிப் போயினம். அந்தக் கொஞ்சத் தூரத்துக்கும் அவையளாலை நிண்டு கொண்டு இடத்தைக் குடுக்கேலாமைப் போச்சுது.... பாருங்கோ எங்கடை ஆக்களின்ரை திமிரை. எட ஒரு நோயாளிக்கு எழும்பி இடத்தைக் குடுக்க எங்களிட்டைத் தாராள மனம் இல்லை. பிறகு ஏன் மற்றதைக் கதைப்பான்? நான் சரியா மனம் நொந்து சொல்லுறன். எங்கடை போக்குச் சரியில்லை எண்டு.....! கோவிச்சாக் கோவியுங்கோ.

● வில்லங்கம் விநாசி





# பிள்ளையாருக்கு வந்த சோதனை

மன்னார் - யாழ். பிரதான வீதி, தள்ளாடி விமான ஓடுபாதைக்கு முன்பாக உள்ள பிள்ளையார் சிலை அடையாளம் தெரியாத நபர்களினால் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளது. தள்ளாடி இராணுவ முகாமுக்கு அருகில் உள்ள விமான ஓடு பாதைக்கு முன், வீதியோரத்தில் பல வருடங்களாக காணப்பட்ட சிறிய கோவிலில் வைக்கப்பட்டிருந்த பிள்ளையார் சிலையே இவ்வாறு உடைக்கப்பட்டுள்ளது.இந்த வீதியூடாக நேற்றுக் காலை பயணித்த மக்கள் சிலை உடைக்கப்பட்ட நிலையில் காணப்படுவதை அவதானித்து உரிய தரப்பினருக்கு தெரியப்படுத்தினர். சம்பவம் தொடர்பில் மன்னார் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சிலை ஏற்கனவே இரண்டு தடவைகள் உடைக்கப்பட்டுள்ள நிலையில், புதுப்பித்து வைக்கப்பட்டிருந்த சிலை தற்போது மூன்றாவது தடவையாகவும் உடைக்கப்பட்டுள்ளமை மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது

இதேவேளை, நாயாற்று வழி மற்றும் செம்மண் தீவு பகுதிகளில் உள்ள பிள்ளையார் சிலைகளும் நேற்று இரவு உடைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஆ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அனிகா தலைமறைவு

கொழும்பு, ஒக்.18

முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, குத்தகைக்குப் பெற்ற சொகுசு வீட்டின் உரிமையாளரான அனிகா விஜேசூரிய, அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ரவி கருணாநாயக்க தங்கியிருந்த வீட்டுக்கான குத்தகைப் பணத்தை அர்ஜூன் அலோசியஸ் வழங்கியதாக, அனிகா விஜேசூரிய அண்மையில் சாட்சியமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அவர் சாட்சியம் வழங்கியமைக்காக பெரும்புள்ளிகளால் அவருக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற அச்சத்தாலேயே அவர் நாட்டை விட்டே தப்பியோடியுள்ளதாகக் கூறபட்டுகின்றது. (ஆ)

# பெண்கள் மயம்: திடீர்த் திருப்பம்

கொழும்பு, ஒக்.18

மூன்று நாட்களாகக் காணாமல் போயுள்ள இளம் தாய் மற்றும் இரு சிறுமியர் குறித்துத் திடீர்த்திருப்பம் ஏற்பட்டுள்ளது.

கொலன்னாவை பகுதியைச்சேர்ந்த, ஒன்றரை வயதான குழந்தையின் தாயான, வத்சலா பெரேரா (வயது - 19) அவரது கணவரின் 15 வயதுடைய சகோதரி மற்றும் அயல் வீட்டில்வசிக்கும்14 வயதான தமிழ்ச் சிறுமி ஆகிய மூவருமே இவ்வாறு காணாமல் போன பெண்கள்.

இவர்கள் மூவரும் கடந்த சனிக்கிழமை மாலை ஆடைகளைக் கொள்வனவு செய்வதற்காக, வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

இந்த நிலையில், காணாமல் போனதாகக் கூறப்பட்ட தமிழ்ச் சிறுமி, நேற்றுக் காலை வத்சலா பெரேராவின் கணவருக்குத் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டுள்ளார்.

குறித்த சிறுமியின் பெற்றோர், காணாமல் போன மூவரையும் யாரோ அடைத்து வைத்துள்ளதாகச் சந்தேகிப்பதாகக் கூறியுள்ளனர். இதேவேளை, இவர்களது பெற்றோர் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் நேற்றுக் காலை வெல்லம்பிடிய மற்றும் கிராண்ட்பாஸ் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து இவர்களைத் தேடும் நடவடிக்கைகளைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (அ)

## அந்த நாள் ஞாபகம்......!



1991.10.18

நாகப்பட்டினம் மாவட்டம் அமைக்கப்பட்டது

# கரப்பான் பூச்சி பணிஸ் 10 ஆயிரம் அபராதம்

கொழும்பு, ஒக்.18

பணிஸ் ஒன்றுக்குள் கரப்பான்பூச்சி காணப்பட்டதையடுத்து பேக்கரி உரிமையாளருக்கு கல்கமுவ நீதிமன்றத்தில் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. கல்கமுவ இஹலபளுகந்த பிரதேசத்தில் உள்ள கடையொன்றில் பிரதேசவாசியொருவர் வாங்கிச் சென்ற பணிஸுக்குள் இறந்த நிலையில் கரப்பான் பூச்சியொன்று காணப்பட்டது. இது விடயமாகக் கல்கமுவ சுகாதார சேவை அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது .

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், பண்டுவஸ்நுவர பிரதேசத்தைச் சேர்ந்த பேக்கரி உரிமையாளரொருவரால் குறித்த பணிஸ் தயாரிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதையடுத்து உரிமையாளருக்கு எதிராகக் கல்முவ நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் கல்கமுவ நீதவான் எல்.டி. வருசவிதான குற்றவாளிக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (ஆ)



# 1000 கவிஞர்கள் கவிதைகள் நூல் வெளியீடு




யாழ்ப்பாணம், ஒக்.18

'1000 கவிஞர்கள் 1000 கவிதைகள்' என்ற கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. பல்வேறு நாடுகளையும் சேர்ந்த ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ்க் கவிஞர்களின் கவிதைகளினை உள்ளடக்கி '1000 கவிஞர்கள் 1000 கவிதைகள்' என்ற நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நூலில் 32 நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்து 98 கவிஞர்களின் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. செல்லமுத்து வெளியீட்டகத்தின் முயற்சியில் வெளிவரும் இந்நூலின் நிறை 4 கிலோகிராமுக்கும் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# அச்சுவேலிப் பெண் வாய் திறந்ததால் ஆப்பு!

யாழ்ப்பாணம், ஒக்.18

மறந்து போய்வாயைத் திறந்ததால், கட்டாரில் வைத்து அச்சுவேலிப் பெண் ஒருவர் சிக்கியுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் ஜேர்மனி செல்ல முயற்சித்தபோதே அவர் கைது கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து ஜேர்மனி செல்வதற்காக கட்டாரில் இறங்கி (ட்ரான்சிட்) மாற்று விமானம் மூலம் செல்ல அவர் முயற்சித்தபோதே கைது செய்யப்பட்டுள்ளார்.


மாற்று விமானத்துக்குச் செல்ல முற்பட்ட வேளை, அந்தப் பெண் போலி கடவுச்சீட்டில் வந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

இதுகுறித்த முதற்கட்ட விசாரணைகளில், அந்தபெண் அதிகாரிகளின் கேள்விகளுக்கு வாயைத் திறந்து பதிலளித்துள்ளார். ஆயினும் பின்னர் இடம்பெற்ற விசாரணைகளின் போது தனக்குப் வாய்பேச முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து குறித்த பெண்ணை மருத்துவச்சிகிச்சைக்கு உட்படுத்தியதாகவும், சிகிச்சையின் பின்னர் அவருக்கு வாய் பேச முடியும் என வைத்தியர்களால் உறுதிப்படுத்தப்பட்டது .

இதன் பின்னர், குறித்த பெண் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். தற்போது அவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (ஆ)

# சிவகரன் மீண்டும் விசாரணைக்கு அழைப்பு




கொழும்பு, ஒக்.18

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரனை கொழும்பு பயங்கரவாத விசாரணைப் பிரிவினர், வவுனியா பயங்கரவாத விசாரணைப் பிரிவினூடாக எதிர்வரும் 20ஆம் திகதி விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான கடிதம் நேற்றும்மதியம் அவருக்குக் கிடைத்துள்ளது.

முதலில் கடந்த 2ஆம் திகதி விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் சுகவீனம் காரணமாக விசாரணைக்கு வர முடியாது என சிவகரன் கடிதம் அனுப்பியிருந்தார். இந்த நிலையிலே, எதிர்வரும் 20ஆம் திகதி காலை 9 மணிக்கு கொழும்பு பயங்கரவாத விசாரணைப் பிரிவின் 2ஆம் பிரிவில் விசாரணைக்கு வருமாறு மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஆ)

# போலி லொத்தர்: இளைஞன் கைது

கொழும்பு, ஒக்.18

போலியான லொத்தர் சீட்டுகளைத் தன் வசம் வைத்திருந்த 29 வயதான இளைஞர் ஒருவரை உடப்புஸ்ஸல்லாவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியதகவலையடுத்து, நேற்றிரவு குறித்த இளைஞனைச் சோதனைக்கு உட்படுத்திய போதே அவரிடமிருந்து போலியான லொத்தர் சீட்டுகளைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதன் போது குறித்த இளைஞரிடமிருந்து 3629 லொத்தர் சீட்டுகள் மீட்கப்பட்டன.

10.12.2017 திகதிக்கு அமைய அச்சிடப்பட்டிருந்த குறித்த லொத்தர் சீட்டுகள் 'அபிவிருத்தி லொத்தர் சபையின்' சீட்டுகளைப் போன்று போலியாக அச்சிடப்பட்டிருந்ததோடு, ஒரே தொடரிலக்கத்தையும் கொண்டிருந்தன. (இ)



# பெரிய வெங்காய விலை அதிகரிப்பு

கொழும்பு, ஒக்.18

உள்ளூர்ப் பெரிய வெங்காயத்தின் விலை திடீரென அதிகரித்துள்ளது. இதற்கமைய 40 ரூபாவாகவிருந்த ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயத்தின் விலை தற்போது 70 ரூபா முதல் 100 ரூபா வரை உயர்வடைந்துள்ளதாகத் தம்புளை பொருளாதார மத்திய நிலைய வர்த்தகர்கள் கூறியுள்ளனர். இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயம் மீது 100 வீத வரியை விதிக்குமாறு ஜனாதிபதி அண்மையில் ஆலோசனை வழங்கியிருந்தார். இந்த நிலையில் உள்நாட்டு பெரிய வெங்காயத்துக்கான கேள்வி அதிகரித்து விலையும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போர் ஒத்திகை



வடகொரியா, ஒக்.18

அமெரிக்கா போர்க்கப்பல்களுடன் இணைந்து தென் கொரியக் கடற்படை போர் ஒத்திகையை நேற்று முன் தினம் திங்கட்கிழமை தொடங்கியுள்ளது. அணு ஆயுதச் சோதனை, ஏவுகணைச் சோதனை என உலக நாடுகளை அச்சத்தில் உறையவைத்துள்ளது வடகொரியா.

இந்நிலையில் வடகொரியாவின் எதிர்ப்பையும் மீறி அமெரிக்கா- தென் கொரியா இணைந்து போர் ஒத்திகையைத் தொடங்கியுள்ளன. அமெரிக்காவின் ரொனால்ட் ரீகன் விமானம் தாங்கிக் கப்பல் உட்பட 40 போர்க் கப்பல்கள், போர் விமானங்கள் தாக்குதல் ஹெலிகொப்டர்கள் என்பன இந்த ஒத்திகையில் பங்கேற்றதாக அமெரிக்கக் கடற்படை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.மேலும் இது வழக்கமான போர் ஒத்திகை தான் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த ஒத்திகை தங்கள் நாட்டின் மீது படையெடுப்பதற்கான நடவடிக்கை என வடகொரியா குற்றம்சாட்டியுள்ளது. (க)



## பெண்களைத் துன்புறுத்தினால் அங்கேயே அபராதம்

பிரான்ஸ்,ஒக்.18

வீதிகளில் செல்லும் பெண்களைப் பாலியல் ரீதியாக துன்புறுத்தினாலோ அல்லது கிண்டல் செய்தாலோ அதில் ஈடுபடும் ஆண்களுக்கு அந்த இடத்திலேயே அபராதம் விதிக்கும் சட்டம் விரைவில் பிரன்ஸில் வரவுள்ளது.பிரான்ஸில் பெண்கள் மீதான பாலியல் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. இது தொடர்பாக அந்தநாட்டுப் பெண்கள், தாம் அனுபவிக்கும் வேதனைகளை பிரசாரப்படுத்தி வருகின்றனர்.

இத்தகைய அவல நிலைக்கு முற்றுபுள்ளி வைக்கும்முகமாக பிரான்ஸ் அரசு புதிய சட்டத்தைக் கொண்டு வரவுள்ளது.இது குறித்து, பிரான்ஸ் பாலின சமத்துவ அமைச்சர் மார்லேனி ஷியாபா கூறுகையில், “வீதியில் பெண்களிடம் பாலியல் துன்புறுத்தலில் ஈடுபடும் மற்றும் அநாகரீகமாக நடந்து கொள்பவர்களுக்கு அந்த இடத்திலேயே கடுமையான அபராதம் விதிக்கும் சட்டத்தை கொண்டு வர திட்டமிட்டுள்ளோம்”எனக் கூறியுள்ளார். (க)

## தற்கொலை செய்யும் சீன விண்கலம்

பீஜிங், ஒக்.18

சீன நாட்டுக்குச் சொந்தமான டியாங்கோங் -1 என்ற இராட்சத விண்வெளி ஆராய்ச்சி நிலையம் எப்போது வேண்டுமானாலும் பூமியின் மீது மோதலாம் என சீன விண்வெளித்துறை எச்சரித்துள்ளது. 2011 ஆம் ஆண்டு, ரஷ்யா மற்றும் அமெரிக்காவிற்குப் போட்டியாக மிகப்பெரிய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தினை விண்வெளியில் வெற்றிகரமாக கட்டி முடித்தது சீனா.

சுமார் 8.5 தொன் எடை கொண்ட குறித்த விண்வெளி ஆராய்ச்சி நிலையமானது 2016 ஆம் ஆண்டு தனது கட்டுப்பாட்டையும் முற்றாக இழந்துவிட்டதாகவும், அது 2017 இறுதியில் அல்லது 2018 ஆரம்பத்தில், பூமியின் மீது மோதும் வாய்ப்பு உள்ளது எனவும் ஐக்கிய நாடுகள் சபையிடம் சீனா தெரிவித்திருந்தது. அதனைத் தொடர்ந்து விண்ணில் சுற்றித்திரிந்த டியாங்கோங் - 1 ஆராய்ச்சி நிலையத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர சீன விஞ்ஞானிகள் மேற்கொண்ட முயற்சிகள் எதுவும் வெற்றி பெறவில்லை.இந்த நிலையில் எதிர்வரும் நவம்பர் மாதத்துக்குள் டியாங்கோங் - 1 பூமியுடன் மோதி அழிவுக்குள்ளாகவுள்ளது.(க)

## தாயைக் குத்திய மகன் கைது!

சுவிட்ஸர்லாந்தில் தாயைக் கத்தியால் குத்திக் கொலை செய்த வழக்கில் மகன் கைது செய்யப்பட்டுள்ளார்.சுவிட்ஸர்லாந்தில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் 62 வயதான பெண் தனது கணவரோடு வசித்து வந்தார்.இரு தினங்களுக்கு முன்னர் குறித்த பெண் கத்தியால் குத்தப்பட்டு வீட்டில் கொலை செய்யப்பட்டார்.அவரது கணவர் கத்திக் குத்துக் காயங்களுடன் இருந்த நிலையில் அக்கம் பக்கத்தினருக்குத் தகவல் கொடுத்துள்ளார். இது குறித்துப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட, சம்பவ இடத்துக்கு வந்த அவர்கள் சடலத்தைக் கைப்பற்றி,படுகாயமடைந்த கணவரை ஹெலிகொப்டர் மூலம் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். சம்பவம் தொடர்பாக உயிரிழந்த பெண்ணின் 31 வயதான மகனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.அவரிடம் விசாரணை நடைபெற்று வரும் நிலையில், சம்பவத்தில் தொடர்புள்ளதாகக் கூறி இன்னொரு நபரும் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார். (ஈ)

## இலியானாவா இது?



இலியானா என்றாலே முதலில் எல்லோருக்கும் ஞாபகம் வருவது அவரின் உடலமைப்பு தான். எப்போதும் ‘ஸ்லிம்’மாக இருக்கும் இலியானா சமீபத்தில் ஒரு நிகழ்ச்சிக்கு வந்திருந்தார்.அங்கு இவரைப் பார்த்த எல்லோருமே ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். ஏனெனில் அந்த அளவுக்கு உடல் எடை கூடியிருந்தார்.


பலரும் இது இலியானா தானா என்று கேட்கும் அளவுக்கு அவரின் உடல் எடை கூடியிருந்தது.இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட இலியானாவின் புகைப்படங்கள் தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகப் பரவி வருகின்றன.(க)

## என்னை நோக்கிப் பாயும் தோட்டா




கௌதம் மேனன் இயக்கத்தில் தனுஷ் நடித்து வரும் படம் என்னை நோக்கிப் பாயும் தோட்டா. இந்தப் படத்தின் படப்பிடிப்பு இன்னும் 10% தான் உள்ளது. ஆனால், பல மாதங்களாகப் படத்தின் ஷூட்டிங் நடக்காமல் கிடப்பில் தான் உள்ளது. மேலும், இதன் இசையமைப்பாளர் யார் என்பதும் பல நாட்களாக மர்மமாகவுள்ளது.பலரும் தர்புகா சிவா தான் இப்படத்தின் இசையமைப்பாளர் எனக் கூறி வர, விரைவில் இதற்கான விடையைக் கௌதம் மேனன் அறிவிப்பதாக ருவிட்டரில் கூறியுள்ளார். (இ)

## தீ மோடி அலுவகத்தில்!




புதுடெல்லி,ஒக்-18

புதுடெல்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை தீ விபத்து ஏற்பட்டது. இது குறித்து அதிகாரிகள் தரப்பில், “டெல்லியில், பிரதமர் நரேந்திர மோடியின் அலுவலகத்தின் தென் பகுதியிலுள்ள 242 ஆம் இலக்க அறையில் நேற்று அதிகாலை 3.30 மணி அளவில் தீ விபத்து ஏற்பட்டது. இதனையடுத்து உடனடியாகத் தீயை அணைக்க தீயணைப்பு வீரர்கள் வரவழைக்கப்பட்டனர். 20 நிமிடங்களில் தீ கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அறையில் இருந்த சில பொருட்களுக்கு மட்டும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது” என்று கூறப்பட்டுள்ளது.இந்த தீ விபத்தினால் யாருக்கும் எந்தக் காயமும், உயிரிழப்பும் ஏற்படவில்லை என்று பிரதமர் அலுவலகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## ஐ.எஸ் மீது அதிரடி!

யேமன், ஒக்.18

யேமனில் ஐ.எஸ் தீவிரவாதிகள் முகாம் மீது அமெரிக்க இராணுவம் நடத்திய தாக்குதலில் தீவிரவாதிகள் பலர் கொல்லப்பட்டுள்ளனர். இது குறித்து அமெரிக்க இராணுவம் தரப்பில், “மத்திய யேமனிலுள்ள அல் பைடா நகரில் அமைந்துள்ள ஐ.எஸ் தீவிரவாத முகாம்கள் மீது திங்கட்கிழமை அமெரிக்க இராணுவம் தாக்குதல் நடத்தியது. இதில் பல ஐ.எஸ் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். அந்த முகாம்களில் ஐ.எஸ் தீவிரவாதிகள் ஏ.கே 47 துப்பாக்கிப் பயிற்சி, வெடிகுண்டு வீசும் பயிற்சி போன்றவற்றை ஏவுவது முதலான பயிற்சிகளை அளித்து வந்துள்ளனர்” என்று தெரிவிக்கப்பட்டது. (க)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தமிழக கடற்றொழிலாளர்கள் 8 பேர் கைது

யாழ்ப்பாணம், ஒக்.18

தமிழக கடற்றொழிலாளர்கள் 8 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கையின் கடற்பரப்புக்குள் அத்துமீறினர் என்ற குற்றச்சாட்டின்பேரில் நேற்று அவர்கள் நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. கைதுசெய்யப்பட்ட அவர்கள், மன்னார் கடற்படைத் தளத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டுள்ளனர். மன்னார் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட அவர்கள் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (உ)

## நாமலை விடுவிக்க வேண்டாமென்று கடிதம் ஏதும் கொடுக்கவில்லை

ஹம்பாந்தோட்டையில் அமைந்துள்ள இந்தியத் தூதரக அலுவலகத்துக்கு அருகாமையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களை விடுதலை செய்ய வேண்டாம் என தாம் நீதிமன்றத்துக்குக் கடிதம் எதனையும் கையளிக்கவில்லை என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச நேற்று பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட பின்னர் ஊடகங்கள் மத்தியில் உரையாற்றிய போது, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் அவ்வாறானதொரு கடிதத்தை அனுப்பியதாக குறிப்பிட்டார். அத்துடன் அவர் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணி சீ.தொலவத்தவும் அவ்வாறானதொரு கருத்தை வெளியிட்டார். இது தொடர்பான உண்மைத் தன்மையை ஆராயுமாறு தாம் சட்டமா அதிபரிடம் முறைப்பாடு ஒன்றை முன்வைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். அவ்வாறானதொரு எழுத்து ஆவணம் ஒன்று முன்வைக்கப்பட்டிருக்காவிடின் அது நீதிமன்றத்திற்கு ஏற்படுத்தப்பட்ட அவதூறு என ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (உ)

# தெல்லிப்பழை வைத்தியசாலை ஊழியர்கள் போராட்டம்



தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் பணி புரிந்து வரும் கனிஷ்ட ஊழியர்கள் நேற்று முற்பகல் வைத்தியசாலை முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டமொன்றில் ஈடுபட்டனர். வைத்தியசாலையில் 294 கனிஷ்ட ஊழியர்கள் தேவையான நிலையில் 160 பேரே கடும் பணிச்சுமையின் மத்தியில் தமது கடமையை ஆற்றி வருகின்றனர். இரவு, பகல் பாராமல் தமது சேவையை ஆற்றி வருகின்ற போதும் எவ்வித மேலதிக நேரக்கொடுப்பனவும் கடந்த ஆறு மாதங்களாக வழங்கப்படவில்லை. இந்தக் கொடுப்பனவை வழங்குமாறு கோரியே வைத்தியசாலையின் கனிஷ்ட ஊழியர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் சம்பவ இடத்துக்குச் சென்ற வடமாகாண சபை உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன், போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடியதுடன், குறைகளையும் கேட்டறிந்து கொண்டார். இதன் போது உரிய தரப்புக்களுக்கு இது தொடர்பாகத் தெரியப்படுத்தி தீர்வு பெற்றுத் தருவதாக வடமாகாண சபை உறுப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஊழியர்களுக்கு உறுதியளித்தார். (உ)

## பலாத்கார இணைப்புக்கு அனுமதிக்க முடியாது



வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பில் அங்கு வாழும் ஒரு சாரார் இணைப்பை விரும்பா விட்டால்பலாத்காரமாக அதனை ஒருபோதும் செய்ய அனுமதிக்க முடியாதென அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார். அத்துடன், வெறுமனே சுயநலத்துக்காகவோ, சிலரைத் திருப்திப் படுத்துவதற்காகவோ, சந்தர்ப்பவாதத்துக்காகவோ மேற்கொள்ளும் அரசியல் சமூகத்திற்கு ஏற்புடையதல்ல எனவும் அவர் கூறியுள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், "1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் இரவோடிரவாக எவருக்கும் தெரியாமல் வடக்கும் - கிழக்கும் இணைக்கப்பட்டது. அப்போது மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ரப் தவறு நிகழ்ந்து விட்டது என்றார். எனினும் அன்னார் அந்தப் பிரதேசத்தில் வாழும் முஸ்லிம்களின் அபிலாஷைகள் தொடர்பில் சில முடிவுகளை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டார். மர்ஹூம் அஷ்ரபின் எண்ணப்பாடுகள் இன்று திரிபுபடுத்தப்படுகின்றன. இன்று சில அரசியல்வாதிகள் "அதைச் செய்தால் இதைத் தாருங்கள்" எனக் கேட்பது எந்த வகையிலும் நியாயமாகாது"- என்றார். (எ)

## தீவிரவாத முறியடிப்பு சட்டம் அடுத்த வருடம்

தீவிரவாத முறியடிப்பு சட்ட மூலம் அடுத்தவருடம் முதற்பகுதியில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று அரசாங்கம் உறுதியளித்துள்ளது. சட்ட ஒழுங்குகள் அமைச்சர் சாகல ரத்நாயக்க இதனை நேற்று நாடாளுமன்றத்தில் வைத்து அறிவித்துள்ளார். குறித்த சட்ட மூலத்தில் மேலும் சில திருத்தங்கள் சேர்க்கப்படவேண்டியுள்ளதுடன், அது குறித்த பல்வேறு தரப்பினரின் இணக்கப்பாடும் அவசியப்படுகிறது. இந்தநிலையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அடுத்தவருடம் முற்பகுதியில் இந்த சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று அவர் அறிவித்துள்ளார். அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திய ஒத்திவைப்பு பிரேரணை ஒன்றை எதிர்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் இன்று முன்வைத்தார். இது தொடர்பில் உரையாற்றும் போதே அமைச்சர் சாகல ரத்நாயக்க இதனைக் கூறியுள்ளார். (உ)

## மரண அறிவித்தல்

### நாகரட்ணம் பாலசிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை, கொழும்பு)



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கொழும்பு மற்றும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரட்ணம் பாலசிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியை, கொழும்பு) 16.10.2017 திங்கட்கிழமை தனது 83ஆவது வயதில் லண்டனில் காலமானார்.

அன்னார் அமரர் தம்புச்சாமி குமாரசாமி (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) - அன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், அமரர்களான பொன்னையா - பவளம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பொன்னையா பாலசிங்கத்தின் (ஓய்வுபெற்ற கொழும்பு விற்பனை இலாகா உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற குமாரசாமி செல்வரத்தினத்தின் அருமைச் சகோதரியும், லண்டன் சுதாமதி சிறீ சற்குணம் (இயக்குநர், வீணை ஆசிரியை, மாதங்கி கலைக்கூடம், லண்டன்), காலஞ்சென்ற பாலசிங்கம் பாஸ்கரன் (புகைப்படக் கலைஞர் - Singham Photographie studio, லண்டன்), பாலசிங்கம் பிரபாகரன் (ஸ்தாபகர், இயக்குநர், இன்பத் தமிழ் ஒலி, வானொலி, சிட்னி ஆஸ்திரேலியா), லண்டன் (selvam Printers) ஸ்தாபக உரிமையாளர்களான பாலசிங்கம் புஷ்பாகரன், பாலசிங்கம் பரணீகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், அய்யாத்துரை சிறீசற்குணம்(லண்டன்), காயத்திரி(Romani) பாஸ்கரன் (லண்டன்), திலகா பிரபாகரன் (ஆஸ்திரேலியா, சிட்னி), செல்வமதி (சுமதி - லண்டன்), கௌரி மனோகரி(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் லண்டன் தாரணி, டனி, அருண், அரவிந், அர்ஷன், ஆஸ்திரேலியா பிரசன்னா, பிரகாஷ், ஜெசிக்கா, Felish லண்டன் சுரபி, சரணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
பாலசிங்கம் பிரபாகரன்
0425324953

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சம்பந்தர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றுவதன் மூலம் அவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் அந்த பிரேரணையில் எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பிரேரணையின் உள்ளடக்கத்தை இரா.சம்பந்தன் நேற்றுமுன்தினம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

### ஒரு நாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாள உண்ணாவிரதப் போராட்டமாக மாற்றி தற்காலிகமாக இடை நிறுத்துமாறு மாணவர் ஒன்றியம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களை கோரியதை அடுத்து மாணவர்கள் தமது போராட்டத்தை தற்காலிகமாக நேற்று மாலை 4 மணியுடன் முடிவுக்குக் கொண்டு வந்தனர். இதன்போது குறிப்பிட்ட மாணவர்கள், குறித்த சந்திப்பில் அரசியல் கைதிகள் விடயம் தொடர்பில் தாம் ஜனாதிபதியுடன் அழுத்தமாகப் பேசி தீர்வினை பெற்றுக்கொள்ள போராடுவோம். தமது கோரிக்கைக்கு ஜனாதிபதி செவி சாய்க்கும் நிலை ஏற்பட்டால் ஒட்டுமொத்த பல்கலைகழக மாணவர்களை ஒன்று திரட்டி தீர்வு கிடைக்கும் வரையில் போராடுவோம் என்று குறிப்பிட்டுள்ளனர். (எ)

### இராணுவத்துக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர். பிரதேச செயலக வாயிலை முற்றுகையிட்டு குறித்த போராட்டத்தினை முன்னெடுத்ததோடு இராணுவ வாகனங்களை மறித்தும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்பாகவுள்ள இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்டுள்ள பொது மக்களின் 19 ஏக்கர் காணியை விடுவிக்குமாறு கடந்த பெப்ரவரி மாதம் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். இந்நிலையில், மக்களின் காணிகளை 3 கட்டங்களாக விடுவிப்பதாக இராணுவம் அறிவித்திருந்தனர். எனினும் இந்த விடயம் தொடர்பில் தற்போதுவரை எவ்வித சாதகமான பதிலும் கிடைக்காத நிலையில், மீண்டும் அப்பகுதி மக்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். (எ)

### ஜகார்த்தா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரின் நண்பர்கள் சம்பவ இடத்துக்குச் சென்று பார்த்தபோது, இறந்த இளைஞனின் உடலில் கார் ரயர் அடையாளங்கள் காணப்பட்டன. அதிகாலை காலை 4 மணிக்கு நடந்த விபத்தை மிகத்தாமதித்தே, காலை 8 மணியளவிலேயே பொலிஸார் உரியவர்களுக்கு அறிவித்துள்ளனர். எனவே, கார் ஏற்றியே குறித்த இளைஞர் கொல்லப்பட்டுள்ளதாக, இதனை இந்தோனேசிய பொலிஸார் மூடி மறைப்பதாகவும், உயிரிழந்தவர்களின் நண்பர்கள் 'எதிரொலிக்குத்' தெரிவித்தனர்.

உயிரிழந்த இளைஞர் ஐ.நா.வில் அகதிக்கான அந்தஸ்துப் பெற்றவர் எனவும், ஆனால் அவரின் சாவு குறித்து ஐ.நாவுக்கான அகதிகள் அமைப்போ, ஐ.ஒ.எம் என்னும் அகதிகளுக்கான தொண்டு நிறுவனமோ எவ்வித அக்கறையும் காட்டவில்லை என்றும் விசனம் வெளியிடப்பட்டுள்ளது. (அ)

### இனிமேல்....


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறவில்லை. பொதுவாகவே வெளியிலிருந்து வருபவர்கள் யாவரையும் நாம் இவ்வளவு காலங்களில் முதலமைச்சராக ஏற்றுக்கொள்ளப்போவதில்லையெனத் தெளிவாக முடிவெடுத்துள்ளோம்" - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி Ethiroli

## கறப்பதற்கு இனி என்ன இருக்கிறது?



# சிவாஜியைத் துரத்தும் சி.ஐ.டி

கொழும்பு குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவினர் தன்னை விசாரணைக்கு அழைத்துள்ளதாக வடமாகாண ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அங்கு குறிப்பிட்ட அவர்,

கொழும்பு குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவின் அழிவுகளைத் தடுக்கும் பிரிவை சேர்ந்தவர்கள் எனத் தொலைபேசி ஊடாக தம்மை அறிமுகப்படுத்தியவர்கள் , பௌத்த மத குரு ஒருவர் எனக்கு எதிராக முறைப்பாடு ஒன்றினைப் பதிவு செய்துள்ளதாகவும் , அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டி உள்ளதால் என்னை கொழும்பில் உள்ள அவர்களது அலுவலகத்திற்கு வருமாறு அழைத்தனர்.

அதற்கு நான் எனது உடல் நிலை மோசமாக உள்ளமையினாலும் , கொழும்பு வருவதற்கான வசதிகள் இல்லாமல் இருப்பதாலும் கொழும்புக்கு விசாரணைக்கு வர முடியாது. நீங்கள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலையோ, வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்திலையோ அல்லது யாழ்ப்பணத்தில் வேறு எங்காவது விசாரணைக்கு அழைத்தால் வர முடியும் என கூறினேன். அது தொடர்பில் தாம் பின்னர் கூறுவதாகக் கூறி அழைப்பைத் துண்டித்துக்கொண்டார்கள் எனத் தெரிவித்தார். (எ)

## கட்டுநாயக்கவில் 60 பேர் கைது

கட்டுநாயக்க விமான நிலையத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் சுற்றித்திரிந்த 60 பேரை, கட்டுநாயக்க குற்றத்தடுப்புப் பொலிஸார் நேற்று கைது செய்து, மினுவாங்கொடை மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும், தலா 1, 500 ரூபாய் வீதம், 90 ஆயிரம் ரூபாயை அபராதத் தொகையாகச் செலுத்துமாறு, மினுவாங்கொடை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். நாட்டின் பல பாகங்களிலுமிருந்தும் கட்டுநாயக்க வந்து சுற்றித்திரிந்த நிலையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டள்ளது. (உ)

## கொழும்பு பல்கலைக்கழக கலைப்பீடத்துக்குப் பூட்டு

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் கல்வி நடவடிக்கைகள் மறு அறிவித்தல் விடுக்கப்படும் வரை நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இரண்டு மாணவர் குழுக்களுக்கு இடையில் நேற்று ஏற்பட்ட மோதல் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் தெரிவித்துள்ளார். இந்த சம்பவத்தில் இரண்டு மாணவர்கள் காயமடைந்துள்ளனர். (உ)

## 18 கட்சிகளுடன் மகிந்த அணி கூட்டு

கொழும்பு, ஒக்.18

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து பிரிந்து 18 கட்சிகளுடன் புதிய கூட்டமைப்பு ஒன்றின் கீழ் எதிர்வரும் தேர்தலை சந்திக்க ஒன்றிணைந்த எதிர்க் கட்சி தீர்மானித்துள்ளது. நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவர் ஜீ.எல் பீரிஸ் இதனை தெரிவித்துள்ளார். எனினும் தேர்தலில் போட்டியிடவுள்ள சின்னம் தொடர்பில் இன்னும் தீர்மானிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (உ)

## விமலின் மனைவியால் ரஞ்சனுக்கு சிக்கல்

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் மனைவி சசி வீரவன்ச தொடர்பாக பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க கூறிய கருத்துத் தொடர்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட சட்டத்தரணிகளான பிரேமினாத் சி தொலவத்த மற்றும் மாபகம விமலரத்ன ஆகியோர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளனர். குறித்த விடயம் தொடர்பில் சட்டத்தரணிகள் இருவரும் விளக்கமளித்திருந்ததுடன், ரஞ்சன் ராமநாயக்க பேசிய வீடியோ ஆதாரத்தையும் இதன் போது வெளியிட்டுள்ளனர். (உ)

## பாலைக்குற்றி கடத்திய இருவர் பள்ளிக்குடாவில் கைது!



சட்டவிரோதமான முறையில் பாலை மரக்குற்றிகளை கொண்டுச் சென்ற இருவரை கிளிநொச்சி - பூநகரி, பள்ளிக்குடாப் பகுதியில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்துடன், மரக்குற்றிகளை கொண்டுச் செல்ல பயன்படுத்திய வாகனத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இரகசியத் தகவலையடுத்து நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைப்பற்றப்பட்ட பாலைமரக் குற்றிகள் பல இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்தது என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இந்த நிலையில், சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், சான்றுப்பொருட்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர். (உ)

## வவுனியா குண்டுத் தோசை தேசிய மட்டத்தில் முதலிடம்



வவுனியா, ஒக்.18

உலக உணவு தினத்தினை முன்னிட்டு 'உள்நாட்டு உயிர்ப்பலவகைமையின் ஊடாக போசணை மிக்க உணவுகள்' எனும் தலைப்பின் கீழ் தேசிய உணவுக் கொண்டாட்டம் நேற்றுமுன்தினம் கண்ணொருவையில் அமைந்துள்ள தாவரக் கரு மூல வள நிலையத்தில் நடைபெற்றது. மத்திய விவசாய அமைச்சு ஊடாக நடத்தப்பட்ட நிகழ்வில் உள்நாட்டு உணவு உற்பத்தியில் ஈடுபடும் உணவு உற்பத்தியாளர்களிடையே இரண்டு வகையாக மாவட்ட மட்ட போட்டிகள் நடைபெற்று இரண்டு போட்டியாளர்கள் தேசிய மட்டத்துக்கு தேர்வாகினர்.

வேர்க்கிழங்குப் பயிர்கள் மற்றும் தானியப்பயிர்களிலான பெறுமதி சேர் உணவு தயாரிப்பில் கூமாங்குளம் - அம்பாள் விவசாய பெண்கள் அமைப்பைச் சேர்ந்த இராசலிங்கம் கலாநிதி என்பவர் தரமான போசணை பெறுமதியான 'குண்டு தோசை' தயாரிப்பில் தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்டத்துக்கு தேர்வாகினார். இவர் தேசிய மட்டத்தில் நடைபெற்ற 25 மாவட்டப் போட்டியாளர்களுக் கிடையே பங்கு பற்றி வவுனியா குண்டுத் தோசைக்கு முதல் இடத்தினைப் பெற்றுக் கொடுத்துள்ளார். (உ)

உங்கள் துயரில் பங்கெடுக்கவும், உறவுகளுக்கு அறிவிக்கவும்
மரண அறிவித்தல்
நினைவஞ்சலி
கண்ணீர் அஞ்சலி
கட்டணம் இன்றி பிரசுரிக்க
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
எதிரொலி Ethiroli
021 3004848
நிபந்தனை களுக்குட்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 18.10.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.